# கலித்தொகைக் களிறுகளின் வாழ்வியல் காட்சிகள்: பாலைக்கலி வழி ஒரு மதிப்பீடு

முனைவர் இரா. விஜயன்
விரிவுரையாளர்
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர்.

கற்றறிந்தோர் ஏத்தும் கலியானது பண்டைக் காலத்தில் இசையோடு பாடும் இசைப்பாடலாகவே திகழ்ந்துள்ளது. ஒற்றோடு புணர்ந்த (நூற்பா : 242) என்னும் தொல்காப்பிய நூற்பாவிற்கு உரையெழுதிய பேராசிரியர், "கலியும், பரிபாடலும் போலும், இசைப் பாட்டாகிய செந்துறை மார்க்கத்தன என்பது" என்று விளக்கம் தருகின்றார். செய்யுட்களின் இனிதான துள்ளல் ஓசைநயமும், உவமைகளின் திறமும், எடுத்தாளும் அறங்களின் செறிவும், வெளிப்படும் வாழ்வியல் செழுமையும் கொண்டு தமிழ் இலக்கியங்களில் காணலாகும் வாழ்வியல் விழுமியங்களில் கலித்தொகை எப்போதும் முன் வந்து நிற்கும் தன்மை உடையது.

ஐந்திணைக் கலியினுள், பெருங்கடுங்கோ பாடிய பாலைக்கலியில் காணலாகும் களிற்றின் வாழ்வியலானது, உவமையாய்ப் பிரிதல் நிமித்தம் பேசும் இடங்களில் கலிப்பாவில் எடுத்தாளப்பட்டுள்ள பாலைக்கலியின் வழி காணலாகும் களிற்றின் வாழ்வியலைக் காணும் முகமாக இக்கட்டுரையானது தனது பயணத்தை அமைத்துக் கொள்கின்றது.

## தடம் மாறும் தன்மை

தலைவியைப் பிரிந்து பொருள்தேட முனைந்த தலைவனைத் தடுத்து, அவன் செல்லும் வழியின் தன்மை எத்தகையது என்று விளக்குமிடத்துத் தோழி,

"பாஅல் அம்செவிப் பணைத்தாள் மாநிரை
மாஅல் யானையொடு மறவர் மயங்கித்
தூறு அதர்பட்ட ஆறுமயங்கு அருஞ்சுரம்
இறந்து நீர்செய்யும் பொருளினும்"

(பாலை. 41:1-4)

என்றுரைக்கின்றாள். "தலைவனே, நீ கடந்து செல்ல நினைக்கும் கானக வழியானது, அகன்ற காதும், பருத்த கால்களும் உடைய யானைகள் கூட்டம் கூட்டமாக மதங்கொண்டு திரியும்., ஆ அவ்வாறு திரிவதால் பாதைகள் மறைந்து, பொய்ப்பாதைகள் பல தோன்றி இருக்கும். யானைகளே அவற்றைக் கண்டு மயங்கித் தனது பாதை தவிர சினங்கொண்டு திரியும்" என்று தோழி பாலை வழியின் தன்மை இதுவெனத் தலைவனுக்கு எடுத்துரைக்கின்றாள்.

பாலையின் கருப்பொருள் குறித்துத் தொல்காப்பியம் பேசுமிடத்து, பாலை நில விலங்காய், செந்நாயையும், புலியையும் குறிப்பிடும். களிற்றைப் பற்றி அங்கு குறிப்பில்லை. பின் வந்த உரையாசிரியர்கள் வலியழிந்த யானையும் பாலைக்கே உரியது என்று குறிப்பிடுகின்றனர். பாலை நில மரபைக் காணும்போது குறிஞ்சியும், முல்லையும் தம் இயல்பு மாறும்பொழுது பாலையாகத் திரியும் என்பது இலக்கியங்களின்வழி காணலாகின்றது. அவ்வாறெனில், குறிஞ்சியிலும் முல்லையிலும் வாழ்ந்த யானை, அந்நிலம் திரியும் பொழுது, தன் இயல்பும் திரிந்து வலிமையிழந்து வலியிழந்த யானையாய் பாலையில் காட்சி தருகின்றது. ஆகவே பாலையில் களிறா? என்னும் வினாவிற்கு, பாலையிலும் களிறு வாழும், தன் இயல்பு திரிந்து, வெம்மை வாட்டத் தனது வாழ்வைப் பாலையில் செலுத்தும் என்பதை உணர்ந்தறியலாம்.

## நீர் வேட்கை

முதுவேனிற் காலம் எங்கும் வெம்மை பொருள்தேடி வருவேன் என்று தலைவன் மொழியைக் கேட்ட தோழி,

"வேனில் உழந்த வறிது வயங்கும் ஓய்களிறு
வான்நீங்கு வைப்பின் வழங்காத்தேர்
நீர்க்கு அவாஅம்

*கானம் கடத்திர், எனக் கேட்பின், யானொன்று*
*உசாவுகோ - ஐய! சிறிது".* (பாலை. 6:1-4)

என்று பதிலளிக்கின்றாள். "முதுவேனிற்கால உச்சம், பாலை நிலத்திலே கானல் பறக்கின்றது. நீர் என்பது கானாப் பொருளாய் ஆகிப்போனது அப்பாலையில். வேட்கையும், வெம்மையும் தாங்காது களிறுகள், கானல் நீரைத் தாகம் தீர்க்கும் நதிநீர் என்று மயங்கிப் பருக முடியாது, பெருங்கோபம் கொண்டு அலைந்து திரியும். அவ்வேளையில் அதனிடம் அகப்படுவார் உயிர் பிழைப்பாரோ?" என்று தோழி தலைவனை வினவுகின்றாள்.

பாலை நிலத்தில் கானல் நீரை, பருகும் நீரென மயங்கித் திரியும் களிற்றிடம் தப்பிப் பிழைப்பார் எவரும் இல்லை என்பதை மேற்கண்ட பாடல்வழி அறியலாம். மேலும், அவ்வாறு பெருங்கோபம் கொண்டு திரியும் களிற்றை மதம் விரைவில் பற்றும். அதன் மதநீரானது பார்வைக்கும், மணத்திற்கும் தேனை ஒக்கும். அதன் மலரிடத்து வழியும் தேன் என்று மயங்கி வண்டுகள் மொய்க்கும். அவற்றை விரட்டத் தனது காதுகளைக் களிறுகள் இடைவிடாது வீசும் என்பதிலிருந்து யானையின் மதநீர் தேனை ஒக்கும் என்பதும், வண்டுகள் அவற்றை மொய்க்கும் என்பதும் கீழ்க்கண்ட பாலைக்கலி வழி அறிய வருகின்றது.

"நடுவிகந்து ஓரீஇ நயன் இல்லான்
வினைவாங்கக்
*கொடிது ஓர்த்த மன்னவன் கோல்போல ஞாயிறு*
*கடுகுபு கதிர்மூட்டிக் காய்சினம் தெறுதலின்*
*உறழ்ஊறு கமழ்கடா அத்து ஒல்கிய எழில்*
*வேழம்!"* (பாலை. 8:1-4)

### *காதல் வாழ்வு*

வினையின் மேல் பிரிந்து சென்றபோது தலைவன் தான் இன்ன நாளிலே தவறாது திரும்பி வந்து விடுவேன் என்று உறுதிகூறிச் சென்றான். அந்த நாள் நெருங்கியது. அது கண்டு தலைவி, தலைவன் வருவானோ? அல்லது வாரானோ? என்று துயர்



மேற்பட வாயில் பார்க்கின்றாள். அவளின் நிலைகண்டு தோழி, களிற்றின் குடும்பப் பிணைப்பை உவமையாக வெளிப்படுத்தித் தலைவியைத் தேற்றுகின்றாள்.

"அடிதாங்கும் அளவின்ற, அழலன்ன
வெம்மையால்
*கடியவே கனங்குழாஅய்! காடு என்றார்*
*அக்காட்டுள்*
துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின் உண்ணுங் களிறெனவும்"
(பாலை 10:6-10)

என்ற பாடலில், வெம்மையை இருப்பிடமாகக் கொண்ட பாலை நிலத்தில், துடி போன்ற பாதங்களையுடைய களிற்றின் கன்று, மிகக் குறைவாய் இருந்த நீரையும் கலக்கி விடும். வேட்கை மிகுந்த களிறு ஒருபோதும் அதற்கு வருந்தாது, தனது வேட்கையை முதலில் தீர்க்காது, தனது பிடியானைக்கு நீர் கொடுத்து அதன் தாகம் தீர்த்து அதன்பின்னே தனது தாகம் தீர்க்கும் என்று களிற்றின் காதல் வாழ்வியலைத் தோழியின் வழி தலைவிக்கு எடுத்துரைக்கின்றார் பெருங்கடுங்கோன்.

### *வெம்மையின் வேதனை*

பாலை நிலத்தில், நிலவும் வெம்மையில் உயிர்கள் வாழ்வது என்பதே அரிது. அத்தகைய வெம்மை நிறைந்த பாலை நிலத்தில் நீர் காணாது தேடித் தவித்த களிற்றுக் கூட்டம் பாலை நிலமெங்கும் ஓடித் திரியும். பாலை வனத்தில் ஓரிடத்தில் சிறிய நீர் தேங்கி இருப்பதைக் கண்ட களிறு, தனது கூட்டத்தினை அழைக்கும். வேட்கைத் துயர் தாங்காது, களிறு, அந்நீரில் தனது துதிக்கையைச் செலுத்தும். கதிரவனின் வெம்மையால் அந்நீரும் கொதித்துப் போய் இயல்பு மாறி இருந்தது. அதனால் வெம்மை தாங்காது செலுத்திய தனது துதிக்கையினை உடனே வெளியில் இழுத்துக் கொண்டு வெம்மை தாங்காது பாலை

நிலமெங்கும் ஓடித் திரியும் என்று களிற்றின் நீர் வேட்கையையும், பாலையின் வெம்மைத் தன்மையையும் பெருங்கடுங்கோ எடுத்துரைக்கின்றார்.

*"........................ அறுசுனை முற்றி*
*உடங்கு நீர்வேட்ட உடம்பு உயங்கு யானை*
*கடுந்தாம் பதிபு, ஆங்குக் கைதெறப்பட்டு*
*வெறிநிரை வேறாகச் சாரச்சாரல் ஓடி"*
(பாலை. 11:3-6)

## தொகுப்புரை

பாலைநிலத்தின் தன்மையை எடுத்துரைக்க பெருங்கடுங்கோன் களிற்றின் செயலையும், அதன் தன்மையையும் தனது பாலைக்கலியில் இதுவென பதிவு செய்துள்ளார். பாலைநில விலங்கான செந்நாய் பாலைக்கலியில் எங்கும் இடம்பெறவில்லை. வெம்மையை முன்நிறுத்த சில இடங்களில் கிளியும் மானும் சுட்டப்பட்டுள்ளன. குறிஞ்சி நில விலங்கான களிற்றைத் தனது பாலைக்கலி முழுவதும் முன்நிறுத்தி யுள்ளார் பெருங்கடுங்கோன். மலை சார்ந்த பகுதியில் வாழ்ந்த களிறு, அதன் வளம் திரிந்து பாலையாகக் காட்சி மாறும்போது களிற்றின் வாழ்வியல் முறையும் திசைமாறிப் போகின்றது. குளிர்ந்த மலையை நீங்கி, வெம்மையின் உறைவிடமான பாலையில் களிறு பல்வேறு இன்னல்களை எதிர்கொள்ள வேண்டியதா கின்றது. உடல் மற்றும் வலிமை இழந்து உயிர் வாழ்வுக்குப் போராடும் விலங்காகக் களிறு காட்டப் பட்டுள்ளது. இருப்பினும் அதன் குடும்பப் பிணைப்பும், காதல்வாழ்வும் முன்விட, பாலைக்கலியில் உறுதி வாய்ந்ததாக வெளிப்படுத்தப் பட்டுள்ளது. பாலையின் இயல்புத் தன்மையை வெளிப்படுத்தவே களிறு உவமையாக்கப்பட்டுள்ளது என்ற போதிலும், அதன் வாழ்வியல் அமைப்பு முறையானது குறிஞ்சி நிலத்திலிருந்து வேறுபட்டதாய் விளங்கும் தன்மை இங்கு ஒப்புநோக்கத்தக்கது. சுருங்கக்கூறின், மலை சார்ந்த பகுதியில் செல்வந்தனாகத் தனது வாழ்வைச் செலுத்திய களிறு, பாலையில் வளமை இழந்து எளிய வனாகத் தனது வாழ்வைச் செலுத்த முற்படுகின்றது.



# கலித்தொகையில் தலைவியின் பண்புகள்

சு. விஜயா கலைவாணி
முதுநிலை விரிவுரையாளர்
ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரி
தூத்துக்குடி.

## முன்னுரை

மக்களின் பல்வேறு காலச் சமுதாய வரலாற்றினை அறிவதற்கு இலக்கியங்கள் துணை நிற்கின்றன. சங்க இலக்கியம் முற்கால சமுதாய வரலாற்றை அறிவதற்குச் சிறந்த மூலமாக அமைந்துள்ளது. சங்க இலக்கியத்தின் துணைகொண்டு பல வரலாற்று ஆசிரியர்களும், மொழி இலக்கிய ஆசிரியர்களும் தமிழ் மக்களின் வரலாற்றை பெரிதும் ஆராய்ந்துள்ளனர். சிறப்பு வாய்ந்த கலித்தொகையில் மகளிர் மாண்பினை ஆராய்வதாக இவ்வாய்வு அமைகின்றது.

## பெண்ணின் இயல்பு

மனையின் கண் இருந்து அறம்புரியும் உரிமை - தலைவிக்குச் சிறப்பாக உரியதாகும். இதனாலேயே தலைவிக்கு மனைவி, இல்லாள் எனும் பெயர்கள் உரியனவாயின. தலைவனது வாழ்க்கைக்குத் துணையாய் நின்று, ஒன்றுபட்டு வாழும் மனைவியைத் திருவள்ளுவர், வாழ்க்கைத்துணை என்னும் பெயரால் சிறப்பிக்கின்றார். எல்லாப் பொருள்களும் ஒரு வீட்டில் நிரம்பியிருந்தாலும், வாழ்க்கைத் துணையாகிய இல்லாளின் ஒளி நிரம்பாத வீடு வீடாகாது. இதனாலேயே "மனைக்கு விளக்கம் மடவாள்" எனப் புலவர் பாடியுள்ளனர்.

## மணவாழ்வே கற்பு

கற்பு பெண்ணுக்குக் கணவன் நலத்தையும், குடும்ப நலத்தையும் பேணுவதில் உறுதி நல்குகிறது. மலருக்கு மணம் போன்று மகளிருக்குக் கற்பு